# மரணத்தின் பின் மீண்டும் உயிர்த்தெழுதலுக்குரிய ஆதாரம் யாது?

அகிலத்தின் புறவய நிகழ்வுகள், ஆதாரங்கள் யாவும் வாழ்க்கையில் எப்போதும் மீள் கட்டமைப்பு மற்றும் மீள் உருவாக்கம் இருப்பதை சுட்டிக்காட்டுகிறது. இதற்கான உதாரணங்கள் அதிகமாகும். அவற்றுள் வரண்ட பூமியை மழையால் உயிர்ப்பித்தல் என்பது ஒரு உதாரணமாகும்.

"அவன் இறந்தவற்றிலிருந்து உயிருள்ளவற்றை வெளிப்படுத்துகிறான். உயிருள்ளவற்றிலிருந்து இறந்தவற்றை வெளிப்படுத்துகிறான். பூமி வரண்டு போன பின் அதனை உயிர்ப்பிக்கிறான். இவ்வாறே நீங்களும் வெளியேற்றப்படுவீர்கள்". (அர்ரூம் :19). تقدم

மீண்டும் உயிர்கொடுக்கப்பட்டு எழுப்பப்படுதல் சாத்தியம் என்பதற்கு இன்னொரு உதாரணம், எவ்விதக் கோளாறுமில்லாது நேர்த்தியாகவும் ஒழுங்குமுறைப்படியும் இயங்கும் இப்பிரபஞ்சத்தைக் குறிப்பிட முடியும். ஒரு அணுவில் காணப்படுகின்ற மிகச்சிறிய எலக்ட்ரான் கூட ஒரு சுற்றுப்பாதையில் இருந்து மற்றொரு சுற்றுப்பாதைக்கு அதன் இயக்கத்திற்கு சமமான ஆற்றலை பெற்றாலே தவிர சிறிதும் நகர முடியாது. அனுவில் அடங்கியிருக்கும் மிகவும் நுன்னிய இப்பொருளுக்கே இந்நிலையென்றால் கொலைகாரன் அல்லது அநியாயக்காரன் அகிலங்களின் இரட்சகனிடமிருந்து எந்த விசாரணையோ அல்லது தண்டனையோ இன்றி தப்பி ஓடுவதை கற்பனை செய்ய முடியுமா?

“நாம் உங்களை படைத்ததெல்லாம் வீணுக்காக என்றும், நீங்கள் நம்மிடம் கொண்டு வரப்பட மாட்டீர்கள் என்றும் எண்ணிக் கொண்டிருந்தீர்களா?" (என்று கேட்பான்.) உண்மை அரசனான அல்லாஹ் உயர்ந்தவனாகி விட்டான்.(உண்மையாக) வணங்கப்படத்தகுதியானவன் அவனையன்றி வேறுயாறுமில்லை (அவன்) சங்கையான அர்ஷின் இரட்சகன்“. (அல் முஃமினூன்: 115-116). تقدم

"எவர்கள் தீமைககள் செய்தார்களோ அவர்களை நம்பிக்கை கொண்டு நல்லறங்கள் புரிந்தோர்களைப் போன்று அவர்களது வாழ்விலும் அவர்களது மரணத்திலும், சமமாக நாம் ஆக்குவோம் என்று எண்ணிக் கொண்டனரா? அவர்கள் தீர்ப்பளிப்பது மிக்க கெட்டதாகிவிட்டது. வானங்களையும் பூமியையும் அல்லாஹ் தக்க காரணத்தின் மீதே படைத்திருக்கிறான். ஆகவே, (அவர்களில் உள்ள) ஒவ்வொரு ஆத்மாவுக்கும் அவற்றின் செயலுக்குத்தக்க கூலியே கொடுக்கப்படும். அவை (அணுவளவும்) அநியாயம் செய்யப்பட மாட்டாது". (அல் ஜாஸியா:21-22). تقدم

இந்த வாழ்வில் நாம் எமது உறவினர்களில் நண்பர்களில் அதிகமானோரை இழக்கிறோம்

என்பதை அவதானிக்கிறோமல்லவா? அதே போன்று நாமும் ஒரு நாள் இறக்கப்போகிறோம் என்பதை அறிந்துள்ளோம். ஆனாலும் எமது அடி மனதால் நாமேல்லாம் நிரந்தரமாய் வாழ்வோம் என நாம் உணர்கிறோம். மனித உயிரானது மீள் உயிர்ப்பிக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்படும் ஒன்றாக இல்லாது வெறும் பௌதீக விதிகளுக்குட்பட்டு சடரீதியான வாழ்க்கை கட்டமைப்புக்குள் மனித உடல் இருந்தால் இந்த இயல்பான சுதந்திர உணர்வுக்கான எந்த அர்த்தமும் இருக்காது. அவ்வாறிருப்பின் உயிரானது காலத்தைக் கடந்து மரணத்தைக் கடந்து சென்றுவிடும்.

---


இஸ்லாம் குறித்த கேள்வி பதில்

المصدر: https://nwahy.com/qa-islam/ta/26/

Arabic المصدر: https://nwahy.com/qa-islam/ar/26/

Thursday 21st of May 2026 11:52:11 PM